# சுன்னாவும் பித்அத்களும் விரிவான விளக்கம் அமர்வு 2

ஜுமுஆ குத்பா தலைப்பு : சுன்னாவும் பித்அத்களும் விரிவான விளக்கம் அமர்வு 2

வரிசை : 736

இடம் : அரேபியன் கார்டன்ஸ், கல்பாக்கம்-

கதீப் : உமர் ஷரீஃப் அப்துஸ் ஸலாம்

நாள் : 20- 08- 22 | 16-09-1444

**بسم الله الرحمن الرحيم**

إنَّ الْحَمْدَ لِلَّهِ نَحْمَدُهُ وَنَسْتَعِينُهُ، مَنْ يَهْدِهِ اللهُ فَلَا مُضِلَّ لَهُ، وَمَنْ يُضْلِلْ فَلَا هَادِيَ لَهُ، وَأَشْهَدُ أَنْ لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ، أَمَّا بَعْدُ فَإِنَّ خَيْرَ الْحَدِيثِ كِتَابُ اللهِ، وَخَيْرُ الْهُدَى هُدَى مُحَمَّدٍ، وَشَرُّ الْأُمُورِ مُحْدَثَاتُهَا، وَكُلُّ بِدْعَةٍ ضَلَالَةٌ

நிச்சயமாக எல்லாப் புகழும் அல்லாஹ்விற்கே! அவனை நாம் புகழ்கிறோம்; அவனிடம் உதவி தேடுகிறோம். அவன் யாரை நேர்வழி செலுத்தினானோ அவரை வழிகெடுப்பவர் யாரும் இல்லை. அவன் யாரை வழிகெடுத்தானோ அவரை நேர்வழி செலுத்துபவர் யாரும் இல்லை. நிச்சயமாக வணக்கத்திற்குரிய

இறைவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாரும் அறவே இல்லை, அவன் தனித்தவன், அவனுக்கு இணை அறவே இல்லை, மேலும் நிச்சயமாக முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவனுடைய அடியாரும் தூதரும் ஆவார்கள் என்று சாட்சி கூறுகின்றேன்.

பிறகு, பேச்சுகளில் மிக சிறந்தது அல்லாஹ்வின் வேதமாகும். வழிமுறைகளில் மிக சிறந்தது முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறையாகும். காரியங்களில் மிக கெட்டவை மார்க்கத்தில் புதிதாக சேர்க்கப்பட்டவை ஆகும். ஒவ்வொரு அனாச்சாரமும் வழிகேடாகும்.

அல்லாஹ் கூறுகின்றான் :

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ

பொருள் : நம்பிக்கையாளர்களே! நீங்கள் அல்லாஹ்வை அவனுக்கு பயப்படவேண்டிய முறைப்படி உண்மையாக பயப்படுங்கள். (முற்றிலும் அவனுக்கு வழிப்பட்டவர்களாக) முஸ்லிம்களாகவே தவிர நீங்கள் இறந்துவிட வேண்டாம். (அல்குர்ஆன் 3 : 102)

يَاأَيُّهَا النَّاسُ اتَّقُوا رَبَّكُمُ الَّذِي خَلَقَكُمْ مِنْ نَفْسٍ وَاحِدَةٍ وَخَلَقَ مِنْهَا زَوْجَهَا وَبَثَّ مِنْهُمَا رِجَالًا كَثِيرًا وَنِسَاءً وَاتَّقُوا اللهَ الَّذِي تَسَاءَلُونَ بِهِ وَالْأَرْحَامَ إِنَّ اللهَ كَانَ عَلَيْكُمْ رَقِيبًا

பொருள் : மனிதர்களே! நீங்கள் உங்கள் இறைவனுக்குப் பயந்து (நடந்து)கொள்ளுங்கள். அவன் உங்கள் அனைவரையும் ஒரே ஓர் ஆன்மாவில் இருந்து உற்பத்தி செய்தான். (ஆரம்பத்தில் அந்த ஒருவரை படைத்து) அவரிலிருந்து அவருடைய மனைவியைப் படைத்தான். பின்பு அவ்விருவரிலிருந்து ஆண்கள், பெண்கள் என பலரை (இப்பூமியில்) பரப்பினான். ஆகவே, (அத்தகைய) அல்லாஹ்வுக்கு நீங்கள் பயந்து (நடந்து)கொள்ளுங்கள். அவனைக்கொண்டே நீங்கள் (உங்களுக்குள் ஒருவருக்கொருவர் வேண்டியவற்றைக்) கேட்டுக்கொள்கிறீர்கள். இன்னும் (அல்லாஹ்வுக்குப் பயந்து) இரத்த உறவினர்களிடமும் (அன்பாக நடந்து கொள்ளுங்கள்). நிச்சயமாக அல்லாஹ் உங்களைக் கவனித்தவனாகவே இருக்கிறான். (அல்குர்ஆன் 4 : 1)

يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ وَقُولُوا قَوْلًا سَدِيدًا يُصْلِحْ لَكُمْ أَعْمَالَكُمْ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ وَمَنْ يُطِعِ اللَّهَ وَرَسُولَهُ فَقَدْ فَازَ فَوْزًا عَظِيمًا

பொருள் : நம்பிக்கையாளர்களே! நீங்களும் அல்லாஹ்வுக்குப் பயந்து நேர்மையான விஷயங்களைக் கூறுங்கள். அவன் உங்கள் காரியங்களை உங்களுக்கு சீர்படுத்தி வைத்து உங்கள் குற்றங்களையும் உங்களுக்கு மன்னிப்பான். அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் எவர் கீழ்ப்படிகிறாரோ அவர் நிச்சயமாக மகத்தான வெற்றியடைந்து விட்டார். (அல்குர்ஆன் 33 : 70, 71)

இன்ஷா அல்லாஹ் இந்த இரண்டாவது பகுதியில நம்ம இன்னும் கொஞ்சம் சுன்னா என்றால் என்ன? சுன்னத்தை சுன்னா சுன்னத் எல்லாம் ஒன்றுதான் இதனுடைய முக்கியத்துவம் என்ன? இது எப்படி புரிந்து கொள்வது இதெல்லாம் ஏன் பின்பற்ற வேண்டும்.

அப்புறம் பித்அத் என்றால் என்ன? பித்அதை ஏன் செய்யக்கூடாது? பித்அத் ஏன் ரொம்ப ஆபத்தான ஒன்று? அதை கொஞ்சம் இன்ஷா அல்லாஹ் நம்ம சுருக்கமாக பார்த்து இந்த அமர்வை நிறைவு செய்வோம்.

கவனிங்க பொதுவா சுன்னா سن يسن ல இருந்து سنه சொல்வார்கள் நடைமுறை பழக்கவழக்கம் அதான் அந்த சுன்னா என்ற வார்த்தையினுடைய தமிழ் மொழிபெயர்ப்பு மார்க்கத்தில் சுன்னா என்று சொன்னால் எதற்கு சொல்லப்படும்?

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வாயிலாக அவர்களின் வழியில் இருந்து அறிவிக்கப்படக்கூடிய அவர்களுடைய சொல்லோ, அவர்களுடைய செயலோ அல்லது, அவர்களுடைய அங்கீகாரமோ, அதற்கு சுன்னா என்று சொல்லப்படும் அவர்களுடைய சொல் என்றால் என்ன உதாரணத்துக்கு :

لَا يُؤْمِنُ أَحَدُكُمْ حَتَّى أَكُونَ أَحَبَّ إِلَيْهِ مِنْ وَالِدِهِ، وَوَلَدِهِ، وَالنَّاسِ أَجْمَعِينَ

அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அறிவிக்கின்றார்கள் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் சொன்னார்கள் உங்களில் யாரும் முஃமினாக ஆக முடியாது அவர் என்னை அவருடைய தந்தையை விட அவருடைய பிள்ளைகளை விட நேசிக்கிற வரை அப்ப இது வந்து சொல் இது வந்து சுன்னாவாகும்.

அறிவிப்பாளர் : அனஸ் இப்னு மாலிக் ரழியல்லாஹு அன்ஹு, நூல் : புகாரி, எண் : 15

498 –حَدَّثَنَا مُحَمَّدُ بْنُ عَبْدِ اللهِ بْنِ نُمَيْرٍ، حَدَّثَنَا أَبُو خَالِدٍ يَعْنِي الْأَحْمَرَ، عَنْ حُسَيْنٍ الْمُعَلِّمِ، ح قَالَ: وَحَدَّثَنَا إِسْحَاقُ بْنُ إِبْرَاهِيمَ – وَاللَّفْظُ لَهُ – قَالَ: أَخْبَرَنَا عِيسَى بْنُ يُونُسَ، حَدَّثَنَا حُسَيْنٌ الْمُعَلِّمُ، عَنْ بُدَيْلِ بْنِ مَيْسَرَةَ، عَنْ أَبِي الْجَوْزَاءِ، عَنْ عَائِشَةَ، قَالَتْ: كَانَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ «يَسْتَفْتِحُ الصَّلَاةَ بِالتَّكْبِيرِ. وَالْقِرَاءَةِ، بِ الْحَمْدُ لِلَّهِ رَبِّ الْعَالَمِينَ، وَكَانَ إِذَا رَكَعَ لَمْ يُشْخِصْ رَأْسَهُ، وَلَمْ يُصَوِّبْهُ وَلَكِنْ بَيْنَ ذَلِكَ، وَكَانَ إِذَا رَفَعَ رَأْسَهُ مِنَ الرُّكُوعِ لَمْ يَسْجُدْ، حَتَّى يَسْتَوِيَ قَائِمًا، وَكَانَ إِذَا رَفَعَ رَأْسَهُ مِنَ السَّجْدَةِ، لَمْ يَسْجُدْ حَتَّى يَسْتَوِيَ جَالِسًا، وَكَانَ يَقُولُ فِي كُلِّ رَكْعَتَيْنِ التَّحِيَّةَ، وَكَانَ يَفْرِشُ رِجْلَهُ الْيُسْرَى وَيَنْصِبُ رِجْلَهُ الْيُمْنَى، وَكَانَ يَنْهَى عَنْ عُقْبَةِ الشَّيْطَانِ. وَيَنْهَى أَنْ يَفْتَرِشَ الرَّجُلُ ذِرَاعَيْهِ افْتِرَاشَ السَّبُعِ، وَكَانَ يَخْتِمُ الصَّلَاةَ بِالتَّسْلِيمِ» وَفِي رِوَايَةِ ابْنِ نُمَيْرٍ، عَنْ أَبِي خَالِدٍ، وَكَانَ يَنْهَى عَنْ عَقِبِ الشَّيْطَانِ

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் உடைய செயல் என்றால் என்ன நான் பார்த்தேன் ரஸூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் தொழுகையில் காலை இப்படி விரித்து வைத்து இன்னொரு காலை வலது காலை நிறுத்தி வைத்து உட்கார்ந்தார்கள் அப்போ இது வந்து செயல் புரியுதுங்களா இன்னொன்று அங்கீகாரம்.

அறிவிப்பாளர் : ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா, நூல் : முஸ்லிம், எண் : 498 (குறிப்பு 2)

அங்கீகாரம் என்றால் என்ன ஒரு மனிதர் வந்தாரு ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவங்களோட தொழுகையில் சேர்ந்தார் தொழுது முடிச்சிட்டு ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் இந்த வார்த்தையை யார் கூறினார்கள்:

اللهم لك الحمد حمدا كثيرا طيبا مباركا

இந்த வார்த்தை யாரு சொன்னாங்கன்னு கேட்டாப்புல அப்போ சஹாபி சொல்றாரு யா ரசூலுல்லாஹ் நான் தான் சொன்னேனு அப்ப ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அப்படியா 30 வானவர்கள் இதை எடுத்துக் கொண்டு போறதுக்கு போட்டி போட்டாங்க என்று சொல்கிறார்கள் அப்ப அந்த சஹாபி சொல்றாங்க நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள் இது அங்கீகாரம் என்று சொல்லப்படும்.

அறிவிப்பாளர் : ரிஃபாஆ பின்த் ராஃபிஃ ரழியல்லாஹு அன்ஹா, நூல் : திர்மிதி, எண் : 404

அப்போ சுன்னா என்று சொன்னால் ஒன்று நபியுடைய நேரடி சொல்லாகா இருக்கலாம், அல்லது நபினுடைய நேரடி செயலாக இருக்கலாம், நபி செய்ததை பார்த்து சஹாபாக்கள் அறிவிப்பதாக இருக்கலாம்.

அது மாதிரி நூற்று கணக்குல ஆயிரக்கணக்கில் இருக்கு அல்லது ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு முன்னால் ஒரு செயல் செய்யப்பட்டு அந்த செயலை நபி

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அங்கீகரித்திருந்தால் ஏற்றுக் கொண்டிருந்தால் அதை மறுக்காமல் இருந்தால் அதுவும் எதுல வந்துடும் சுன்னாவில் வந்துவிடும் புரியுதுங்களா.

மார்க்கத்தில் இந்த சுன்னா உடைய சட்டம் இதற்கு என்ன ஹுக்கும் என்றால் அல்லாஹ்வுடைய தீனிலே மார்க்கத்தினுடைய இரண்டாவது மூல ஆதாரம் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடைய சுன்னாவாக இருக்கிறது.

المصدر الاول அதாவது மார்க்கத்தை எங்கிருந்து எடுப்பீர்களோ மார்க்கத்தை நீங்கள் எங்கிருந்து எடுப்பீர்களோ அந்த முதல் பிறப்பிடம் மார்க்கத்தினுடைய முதல் பிறப்பிடம் எது குர்ஆன் மார்க்கத்தினுடைய இரண்டாவது பிறப்பிடம் مصدر எதிலிருந்து மார்க்கத்தை நீங்கள் எடுப்பீர்களோ மார்க்கத்திற்கு எதை முக்கியமான அடிப்படை ஆதாரமாக ஆக்குவீர்களோ அதனுடைய இரண்டாவது தான் எது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவருடைய சுன்னாவாக இருக்கிறது.

ஹதீஸ் கவனிங்க மார்க்க அறிஞர்கள் என்ன சொல்ல வருகிறார்கள் என்றால் அல்லாஹுத்தஆலா ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு, நல்ல நுணுக்கமாக கவனித்துக் கொண்டே வரணும்.

இந்த வஹீ என்பது நல்லா கவனிங்க! சொல்லும் கருத்தும் அல்லாஹ்வின் புறத்திலிருந்து கொடுக்கப்பட்டதாக இருந்தால், அது குர்ஆன் நல்லா கவனிங்க! لفظ معني word and meaning sentence and meaning வாக்கியமும் அந்த வாக்கியத்தின் உடைய கருத்தும் இரண்டுமே அல்லாஹ்வின் புறத்திலிருந்து கொடுக்கப்பட்டிருந்தால்,

அது என்ன? அல்லாஹ்வின் புறத்திலிருந்து மீனிங் கொடுக்கப்பட்டு விட்டது சென்டன்ஸ் ஜும்லா வாக்கியம் கொடுக்கப்படவில்லை வாக்கியத்தை அல்லாஹ் ரசூலுல்லாஹ்கிட்ட விட்டு விட்டான் இந்த மீனிங்கை நீங்கள் எப்படி வேண்டுமானாலும் மக்களுக்கு கொண்டு போய் சேர்க்கலாம் என்று இருந்தால் அதுதான் ஹதீஸ் So what is the result?

ஹதீஸும் வஹி குர்ஆன் வஹியாக இருப்பதைப் போன்று ஹதீஸும் வஹி தான் நல்லா கவனிங்க புரியலன்னா திரும்ப சொல்றேன் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் சொல்கிறார்கள்:

أَلَا إِنِّي أُوتِيتُ الْكِتَابَ وَمِثْلَهُ مَعَهُ

நான் குர்ஆனும் கொடுக்கப்பட்டிருக்கிறேன் குர்ஆனை போன்றதும் கொடுக்கப்பட்டிருக்கிறேன் குர்ஆனை போன்றது என்றால் அது ஹதீஸ்.

அறிவிப்பாளர் : மிக்தாம் இப்னு மஃதீ கரிப் ரழியல்லாஹு அன்ஹு , நூல் : அபூ தாவூது, எண் : 4604

وَمَا يَنْطِقُ عَنِ الْهَوٰى اِنْ هُوَ اِلَّا وَحْىٌ يُّوْحٰى

இன்னும், அவர் (இந்த குர்ஆனை) மன இச்சையால் பேச மாட்டார். இது (அவருக்கு) அறிவிக்கப்படுகின்ற வஹ்யே தவிர இல்லை. (அல்குர்ஆன் 53 : 3, 4)

அவர்கள் மன இச்சையாக பேச மாட்டார்கள் யாரு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பேசுவது அவர்களுக்கு அறிவிக்கப்படக்கூடிய வஹியை தவிர இல்லை. அப்போ இதுல இருந்து என்ன தெரிகிறது? ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் பேசுவது எல்லாமே வஹி தான், அப்ப அது வார்த்தையாலும் ஓதப்படக் கூடிய வஹியா இருந்தா அது என்னவாகிடும் குர்ஆன் ஆயிடும் இல்ல கருத்து அல்லாஹ்வின் புறத்திலிருந்து வார்த்தை ரசூலுல்லாஹ்வின் புறத்திலிருந்து அது ஹதீஸ் ஆகிடும்.

அவ்வளவுதான் வித்தியாசம் பாருங்க இப்ப இந்த இடத்துல ஒரு சின்ன கேப்ல நீங்க ஒரு முக்கியமான விஷயத்தை புரியும் ரொம்ப முக்கியமான விஷயம் நம்ம எப்படி ஷிர்க் செய்யக்கூடிய பித்அத்வாதிகளுடைய வழிகேடுகளை அடையாளம் காணுகின்றோமோ அவர்களை நாம் பிரித்து அந்த வழிகேட்டையும் அந்த வழிகேட்டை பரப்ப கூடியவர்களையும் நாம் அடையாளம் தெரிந்து கொள்ள வேண்டுமோ அதே போல தான் இன்றைக்கு குர்ஆன் சுன்னாவுடைய பேர்ல அல்லது தவ்ஹீத் என்கிற பெயரில மக்களை வழி கெடுக்கக்கூடிய வழிகேடர்களையும் நாம் தனித்து அடையாளம் காண வேண்டும்.

இந்த பிஜே அவரை சேர்ந்தவர்கள் அவங்க உருவாக்கி வைத்திருக்கிற ஜமாத் இவர்களும் வழிகேடர்கள் தான் இந்த ஷிர்க் வாதிகள் ஒரு பக்கம் வழிகேடுன்னு சொன்னா அந்த வழிகேட போல தான் இவர்களுடைய வழிகேடும் இப்ப நீங்க கேப்பிங்க ஏன்? அவங்களும் ஹதீஸ் தான ஆதாரம் என்கிறார்கள் மார்க்கத்தை ஆதாரமாக சொல்றாங்களே!

அவங்க பித்அத் செய்யலையே, ஷிர்க் செய்யலையே மௌலது ஓதலையே, இங்க பாருங்க ஒருத்தவன் மவுலது ஓதாதனால ஷிர்க் செய்யாததனால தர்காவுக்கு போகாததனால அவன் சொர்க்கத்துக்கு போயிட முடியாது அவன் நேரான பாதையில இருக்கிறவனாகிட முடியாது.

நேரான பாதையில் இருப்பதற்கு அதெல்லாம் தேவை ஆனால், அது மட்டும் தான் நேரான பாதையில இருப்பதற்கு போதுமானது என்று சொன்னால் கிடையாது தொழுதா சொர்க்கத்துக்கு போலாம் அப்போ அதுக்கு என்ன அர்த்தம் ஜக்காத் கொடுக்க தேவையில்லையா! தொழுதா ஜக்காத் கொடுத்தா சொர்க்கத்துக்கு போலாம் அப்ப அதுக்கு என்ன அர்த்தம் ஹஜ்ஜுக்கு போகத் தேவையில்லையா!

அப்ப சொல்லுங்க தொழுதாறு, சக்காத்து கொடுத்தாரு, ஹஜ் செஞ்சாரு, நோன்பு வச்சாரு, சொர்க்கத்துக்கு போயிடலாம் அப்போ வியாபாரத்தில் வட்டி வாங்கினால் வட்டி வாங்குகிறார், ஒரு முஸ்லிமை கொலை பண்றாரு சொர்க்கத்துக்கு போயிட முடியுமா மார்க்கத்தில் சொல்லப்பட்டு இருக்கக்கூடிய எல்லா விஷயங்களையும் நீங்கள் பின்பற்றிய ஆகணும்.

என்ன விஷயம் என்ன பிரச்சனை அவங்களோட நீங்க பாருங்க அவங்களுடைய பிரச்சாரத்தை இதெல்லாம் ரொம்ப முக்கியமான பாயிண்ட் அதனால இந்த விஷயத்தை நீங்கள் விளங்கியே ஆகணும் ஆரம்பத்துல என்ன சொன்னாங்க மார்க்கத்தின் ஆதாரம் குர்ஆன் ஹதீஸ் என்றாங்க இல்லையா அல்ஹம்துலில்லாஹ் அதைக் கேட்டுட்டு தான்,

மக்கள் எல்லாம் பின்னாடி போனாங்க கரட்டு போய் தான் ஆகணும் அப்படி சொல்றதுல அதுதான் கரெக்ட் இப்போ கடைசியில அவங்களுடைய வழிகேடு எப்போ ஆரம்பிச்சதோ அப்ப கடைசியில இப்ப எப்படி வந்து நின்னாங்க மார்க்கத்தின் ஆதாரம் வஹிதான் எப்படி வந்து நின்னுட்டாங்க

மார்க்கதுடைய ஆதாரம் நீங்க எங்க வேணாலும் பாருங்க இததான் ஹைலைட் பண்ணுவாங்க வஹி தான் பாதுகாக்கப்பட்டது மார்க்கத்தினுடைய ஆதாரம் வஹிதான் நாங்க இத தான் அந்த காலத்தில் இருந்து சொல்லிக்கிட்டு இருக்கும் புரியுதா!

இல்லையா நீ இந்த காலத்தில் இருந்து சொல்லு அல்லது நூறு வருஷத்துக்கு முன்னாடி, உன்ன மாதிரி வழிகேடன் 100 பேர் சொன்னதிலிருந்து சொல்லு நமக்கு அதெல்லாம் பிரச்சனை கிடையாது. இப்ப என்ன கேள்வி வஹி தான் ஆதாரம்.

அப்ப என்ன சொல்ல வராங்க அப்படின்னு சொன்னா இவங்களுடைய கருத்தின் படி சித்தாந்தத்தின்படி இவங்க வஹீ என்று சொல்வது எதை தான் குர்ஆனை மட்டும்தான் வஹி என்று சொல்வது குர்ஆனை மட்டும்தான் அப்ப குர்ஆன் தான் ஆதாரம் அப்ப ஹதீஸ் ஆம்! ஹதீஸூம் ஆதாரம்.

ஆனால், இங்க தான் வருது அந்த வஹியாகிய குர்ஆனுக்கு முரண்படவில்லை என்றால் இப்ப புதுசா வந்து புகுத்தியாச்சு வஹியாகிய குர்ஆனுக்கு முரண்படவில்லை என்றால் ஹதீஸ் எங்களுக்கு பிரச்சனை இல்லை புரிஞ்சிருச்சா எப்படி வழிகேடு வந்துச்சுன்னு நம்ம என்ன சொல்றோம்.

வஹீ தான் ஆதாரம் வஹியில் எதுவும் வரும் ஹதீஸூம் வரும் அது ஓதப்படக் கூடிய வஹியாக இருந்தால் அது குர்ஆன் ஓதப்படாத வஹியாக இருந்தால் அது என்ன? ஹதீஸ். சொல்லும் கருத்தும் அல்லாஹ்வின் புறத்திலிருந்து இருந்தால் அது குர்ஆன். கருத்து அல்லாஹ்வின் புறத்திலிருந்தும் சொல் ரசூலுல்லாஹ் உடையதுமாக இருந்தால் அது ஹதீஸ் இரண்டுமே ஆதாரம் இந்த இரண்டுக்கும் இடையிலே முரண்பாடே நடக்காது என்று சொல்கிறோம்.

இந்த இரண்டுக்கும் இடையில முரண்பாடு நிகழாது என்று சொல்றோம் குர்ஆனுக்கும் ஸஹீஹான ஹதீஸுக்கும் இடையில முரண்பாடே நடக்காது, நிகழாது அப்படி முரண்பாடு இருக்கிறது என்று ஒருவன் சொன்னால் அவனுடைய அறிவில் தான் முரண்பாடு இருக்கிறது.

எதுல முரண்பாடு கிடையாது எந்த ஹதீஸோ குர்ஆனுடைய வசனங்களுக்கு முரண்பட்டதாக இருக்கவே இருக்காது. அப்ப இது எவ்வளவு பெரிய வழிகேட்டை மக்களுக்கு மத்தியில அந்த விஷம் கலந்த தேன் மாதிரி, விஷம் கலந்த பால் மாதிரி ஈஸியா புகுத்திட்டு போய்ட்டாங்க பாருங்க.

மக்களை நேர்வழின்னு சொல்லி அழைச்சிட்டு வந்துட்டு கடைசியில எங்க சந்தேகத்தை உண்டு பண்ணிட்டு போயிட்டாங்க ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் உடைய ஹதீஸில் அப்ப நூற்றுக்கணக்கான சஹாபாக்களும், தாபியீன்களும் அறிவிக்கக்கூடிய ஹதீஸா இருந்தாலும் இவர்கள் தங்களுடைய ஒரு அறிவை வைத்து இது இந்த ஆயத்துக்கு முரணா இருக்குன்னு சொல்லிட்டா ஈஸியா அதை மறுத்துட்டு போயிடலாம் உங்களுக்கு நான் சொல்ற விளக்கம் புரியுதா?

ஏன்னா ஒரு ஹதீஸ் ஒரு ஆயத்துக்கு முரணா இருக்குன்னு யாரு முடிவு செய்றது அதுக்கும் ஒரு விவஸ்தை இல்லை, ஒரு ஆபரேஷன் பண்ணனும் அதுக்கு ஒரு டாக்டர் தேவை விவஸ்தை இருக்கா இல்லையா? சொல்லுங்க ஒரு கட்டடம் கட்டணம் அந்த கட்டடத்துக்கு ஒரு இன்ஜினியர் தேவை ஒரு இன்ஜினியருக்கு ஒரு விவஸ்தை இருக்கா இல்லையா?

இப்ப இவ்வளவு பிரபலமான ஸஹீஹான நூற்றுக்கணக்கான இமாம்கள் ஏற்றுக் கொண்ட ஒரு ஹதீஸை குர்ஆனுக்கு முரண்படுத்துன்னு சொல்றாங்க அப்படி சொல்றவருக்கு எந்த விவஸ்தையும் தேவையில்லையாம்! அவர் சொன்னார் என்றால் முடிஞ்சு போச்சு ஏற்றுக் கொண்டு போயிடனுமா அப்ப அவர் யாரா தான் இருக்கணும் அப்ப அப்படிப்பட்ட ஒரு தகுதியை கொடுக்கிறதா இருந்தா யாரா இருக்கணும்? அதனால தான் நம்ம சொல்லுறோம் இவர்கள் பிஜேவை நபியாக ஏற்றுக் கொண்டவர்கள்.

நம்ம சொல்லும் போது ரொம்ப பேருக்கு கோபம் வரும் உண்மை என்ன அதுதான் இல்லையா புரியவில்லை. கடைசியில சுத்தி வளைச்சு போனா இப்ப நம்ம என்ன சொல்றோம் ரசூலுல்லாஹ் சொன்னா நம்ம கண்மூடித்தனமாக ஏற்றுக் கொள்வோம் என்கிறோம் இல்லையா!

ஏன் அவங்க ரசூல் ஏன்னா அவங்க நபி நமக்கு விளங்காதது அவங்களுக்கு விளங்கும் என்கிறோம் இப்ப அவங்க என்ன செய்றாங்க பிஜே சொல்லிட்டா அதுல நாங்க கேள்வியே கேட்க மாட்டோம் பிஜேக்கு முரண்படுதுனா முரண்படுது, பிஜே இது சரியில்லனா சரியில்ல இந்த ஹதீஸ் சயின்ஸ்க்கு முரண்படுதுனு பிஜே சொல்லிட்டாருன்னா ஆமா முரண்படுது,

அப்ப என்ன அர்த்தம் ஆச்சு அப்ப அதை எதிர்த்து கேட்க மாட்டோம் அதற்கு மறுப்பு சொல்ல மாட்டோம் அவருக்கு முரண்பட்டா எங்க எல்லோருக்கும் முரண்படுது அப்ப என்ன அர்த்தம் அவரை நீங்கள் உங்களுக்கு நபியாக்கி கொண்டீர்கள் அவரை நீங்க உங்களுக்கு ரசூலாகிட்டீங்க அவ்வளவுதான் முடிஞ்சு போச்சு புரியுதா இல்லையா அல்லாஹ் பாதுகாக்கணும்.

அப்ப நல்லா கவனிச்சுக்கோங்க மார்க்கத்தினுடைய ஆதாரம் வஹி என்று அவர்கள் சொல்வதற்கும் நம்ம சொல்றதுக்கும் இடையிலே வித்தியாசம் இருக்கு அவர்கள் இந்த வார்த்தையை தவறாக பயன்படுத்தி மக்களை வழி கெடுக்கிறார்கள், வஹி என்பதை குர்ஆனோடு நிறுத்திக் கொண்டு ஹதீசை வஹியில் இருந்து பிரித்து விடுகிறார்கள்.

அது தப்பு குர்ஆனும் வஹி ஹதீஸும் வஹி குர்ஆன் எத்தகைய வஹி அதனுடைய சொல்லும் அல்லாஹ்வின் புறத்திலிருந்து அதனுடைய கருத்தும் அல்லாஹ்வுடைய புறத்திலிருந்து அது தொழுகையிலே ஓதப்படக் கூடிய வஹியாகும்.

ஹதீஸ் என்பது வஹீ தான் அதனுடைய கருத்து அல்லாஹ்வின் புறத்திலிருந்து சொல் ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் புறத்திலிருந்து அதனால் தான் நீங்கள் பார்த்தீர்கள் என்றால் ஒரே ஹதீஸ் ஒரே கருத்து பல வாக்கியங்களில் வந்திருக்கும் கருத்து ஒண்ணா இருக்கும் வாக்கியங்கள் பல வாக்கியங்களில் இருக்கும் குர்ஆனில் அப்படி இருக்குமா இருக்காது எல்லா வாக்கியங்களும் ஒரே மாதிரி தான் இருக்கும்.

அப்ப இது ரொம்ப முக்கியமான ஒன்று ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் இந்த சுன்னாவை பின்பற்றுவதை குறித்து நமக்கு அதிகமாக வலியுறுத்தி வழிகாட்டுதல்களை நமக்கு நற்செய்திகளை சொல்லி இருக்கிறார்கள்.

அதில் ஒரு முக்கியமான ஹதீஸ் பாருங்க அபூஹுரைரா ரலியல்லாஹு அன்ஹு அறிவிக்க இமாம் முஸ்லிம் ரஹ்மதுல்லாஹி பதிவு செய்கிறார்கள்:

بَدَأَ الإِسْلاَمُ غَرِيبًا وَسَيَعُودُ كَمَا بَدَأَ غَرِيبًا فَطُوبَى لِلْغُرَبَاءِ الذين يُحْيُون ما أمات الناس من سنني

இஸ்லாம் ஒரு அந்நியமாக தோன்றியது அது தோன்றியது போன்று அந்நியமாக மீண்டும் வரும் அந்நியர்களுக்கு நற்செய்தி உண்டாகட்டும் அப்ப சஹாபாக்கள் கேக்குறாங்க யா ரசூலுல்லாஹ் அது என்ன அந்நியர்கள்? அந்நியர்கள் என்றால் வித்தியாசமா புரியுதா,

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அந்த கேள்விக்கு பதில் சொல்றாங்க என்னுடைய சுன்னத்துகளில் எதை மக்கள் விட்டு விட்டார்களோ அதை மக்களுக்கு மத்தியிலேயே உயிர்ப்பித்து நடைமுறைப்படுத்தக் கூடியவர்கள் அவங்க தான் யாரு இந்த கரீப் என்று சொல்லப்படக் கூடியவர்கள்.

அறிவிப்பாளர் : அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு , நூல் : முஸ்லிம், பைஹகி, எண் : 145, 207

சரிங்களா நல்லா கவனிங்க அல்லாஹ் சூரா அந்நஹ்ல் உடைய 44 ஆவது வசனத்தில் சொல்கிறான்

وَاَنْزَلْنَاۤ اِلَيْكَ الذِّكْرَ لِتُبَيِّنَ لِلنَّاسِ مَا نُزِّلَ اِلَيْهِمْ وَلَعَلَّهُمْ يَتَفَكَّرُوْنَ

அத்தாட்சிகளையும் வேதங்களையும் கொண்டு (அத்தூதர்களை அனுப்பினோம்). (இந்த) ஞானத்தை (நபியே!) உமக்கு இறக்கினோம், அம்மக்களுக்காக இறக்கப்பட்ட (இந்த ஞானத்)தை நீர் அவர்களுக்கு தெளிவுபடுத்துவதற்காகவும்; (அந்த ஞானத்தையும் நபியின் விளக்கத்தையும்) அவர்கள் சிந்திக்க வேண்டும் என்பதற்காகவும்! (அல்குர்ஆன் 16 : 44)

நபியே இந்த குர்ஆனை நாம் உங்களுக்கு இறக்கினோம் எதற்காக மக்களுக்கு நீங்கள் அதை விளக்கிக் கொடுப்பதற்காக அப்போ குர்ஆன் மட்டுமே போதும் என்று இருந்திருந்தால் அல்லாஹுத்தஆலா நபியை அனுப்பி இருக்க தேவையில்லை நபியே இந்த குர்ஆனுக்கு விளக்கம் சொல்லுங்கள் என்று அனுமதி கொடுத்திருக்க வேண்டிய அவசியம் இல்லை.

அப்போ குர்ஆனும் தேவை அந்த குர்ஆனுக்கு ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் உடைய விளக்கமும் தேவை அல்லாஹ் சொல்லி இருக்கான் தொழுங்கள் என்று அந்த தொழுகை ஆரம்பத்தில் இருந்து கடைசி வரைக்கும் எப்படி நிறைவேற்ற வேண்டும் என்பதை யார் சொல்லிக் கொடுத்திருக்கா ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்.

அல்லாஹ் சொல்றான் ஜகாத் கொடுங்கள் என்று சொல்லி அந்த ஜக்காத்தை எதுல எவ்வளவு கொடுக்கணும், யாருக்கு கொடுக்கணும், எப்படி கொடுக்கணும், இதனுடைய விளக்கமும் யார்சொல்லித்தரா நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அல்லாஹ் சொல்லிட்டான் நீங்க ஹஜ் செய்யுங்க சொல்லி, ஹஜ்ஜ எங்க ஆரம்பிக்கணும், எங்க முடிக்கணும், ஹஜ்ஜில் எது கட்டாயம் இதெல்லாம் யாரு சொல்லி தரா,

ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அல்லாஹ் சொல்லிட்டா நீங்க நிக்காஹ் முடியலன்னு சொல்லி அப்ப நிக்காஹ் எப்படி முடிக்கிறது, அல்லாஹ் சொல்லிட்டா இவங்க எல்லாம் உங்களுக்காக ஹராம், ஆனவங்க அப்ப அந்த ஹராமானவர்களை விட்டு எப்படி விலகுவது இப்படி எல்லாம் நமக்கு விளக்கங்களும், எதிலிருந்து கிடைக்கப்பெறுகிறது ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் உடைய

சஹிஹான ஹதீஸ்களிலிருந்து அப்ப நமக்கு மார்க்கத்துல ஆதாரங்கள் குர்ஆனும் மார்க்கத்துடைய பிறப்பிடம், ஹதீஸும் மார்க்கத்தினுடைய பிறப்பிடம், அடிப்படை ஆதாரம். மார்க்கத்தினுடைய பிறப்பிடம். அதுல நமக்கு எந்த சந்தேகமும் வரக்கூடாது.

பலவீனமான ஹதீஸ்களும், பொய்யான ஹதீஸ்களும், இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்களையும், நீக்கிவிட்டு ஏதோ ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் புறத்திலிருந்து, சஹாபாக்கள் அறிவிக்க அந்த சஹாபாக்களிடம் இருந்து நம்பத் தகுந்த அவர்கள் அங்கீகரித்த தாபியீன்கள் அறிவிக்க அந்த தாபியீன்கள் இடமிருந்து ஹதீஸ் கலையின் உடைய நினைவாற்றல் உடைய ஒழுக்கம் உள்ள பாவத்தைக் கொண்டு அறியப்படாத இமாம்கள் அறிவித்து இருக்கிறார்களோ!

அது எல்லாமே எந்த லிஸ்ட்ல வந்துரும் சஹியான ஹதீஸ் லிஸ்ட்ல வந்துரும். அதுல சந்தேகப்படுறது எப்படின்னு சொன்னா ரசூலுல்லாஹ் உடைய காலத்துல ரசூல்லாஹ் சொல்வதின் மேல் முனாஃபிக்குகள் ஆட்சேபனை செய்தார்களே ரசூலுல்லாஹ் காலத்துல ஒரு கூட்டம் இருந்துச்சு இல்ல முனாஃபிக் என்று ஒரு கூட்டம் அந்த கூட்டம் குர்ஆனை மறுத்ததா?

ரசூலுல்லாஹ் உடைய ஹதீஸ மறுத்ததா? சொல்லுங்க ரசூல் அல்லாஹ் உடைய ஹதீஸ மறுத்தது அவங்க குர்ஆனை மறுக்கல முனாஃபிக்குகள் எதை மறுக்கல குர்ஆனை மறுக்கல ரசூலுல்லாஹ் போருக்கு வாங்கன்னு சொல்லுவாங்க எதுக்கு நாங்க போருக்கு வரவேண்டும்.

நீ சொன்னா வந்துடனுமானு கேட்பாங்க விலங்குச்சா உங்களுக்கு இந்த போருக்கு போவோம் என்று ரசூலுல்லாஹ் போவாங்க சரி வாங்கன்னு போய் பாதி தூரத்திலேயே நீ செய்தது சரியில்ல இதை நாங்க ஏத்துக்க மாட்டோம் என்று திரும்பி வந்துவிடுவார்கள்.

ரசூலுல்லாஹ் சொல்லுவாங்க இந்த போருக்கு எல்லாருமே செலவு பண்ணுங்க தர்மம் குடுங்கன்னு சொல்லிட்டு நீ சொல்லிட்டா நாங்க எங்களுடைய காசுகள் எல்லாம் வந்து கொடுத்துடனுமா நாங்க கொடுக்க மாட்டோம் என்பார்கள் ரசூலுல்லாவை நபின்னு சொல்லுவாங்க.

إِذَا جَاءَكَ الْمُنَافِقُونَ قَالُوا نَشْهَدُ إِنَّكَ لَرَسُولُ اللَّهِ وَاللَّهُ يَعْلَمُ إِنَّكَ لَرَسُولُهُ وَاللَّهُ يَشْهَدُ إِنَّ الْمُنَافِقِينَ لَكَاذِبُونَ

நயவஞ்சகர்கள் உம்மிடம் வந்தால், “நிச்சயமாக நீர் அல்லாஹ்வின் தூதர்தான் என்று நாங்கள் சாட்சி பகருகிறோம்” என்று கூறுவார்கள். நிச்சயமாக நீர் அவனது தூதர்தான் என்று அல்லாஹ் நன்கறிவான். நிச்சயமாக நயவஞ்சகர்கள் பொய்யர்கள்தான் என்று அல்லாஹ் சாட்சி பகருகிறான். (அல்குர்ஆன் 63 : 1)

லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மது ரசூலுல்லாஹ் யாரு சொன்னா முனாஃபிக்குகள் சொன்னார்கள் ஆனா பிரச்சனை எதுல பண்ணிக்கிட்டு இருந்தாங்க ரசூல் அல்லா உடைய சொல்லுல பிரச்சாரம் பண்ணிக்கிட்டு இருந்தாங்க அப்ப அல்லாஹுதஆலா எப்படி தனியா பிரிச்சுட்டான் முனாஃபிக் என்று பிரித்து விட்டான்.

லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மது ரசூலுல்லாஹ் என்று சொல்லாதவன் எல்லாம் யாரு காஃபிர் லாயிலாஹ இல்லல்லாஹ் முஹம்மது ரசூலுல்லாஹ் சொல்லிக்கிட்டு முஹம்மது ரசூலுல்லாஹ் உடைய ஹதீஸில் சந்தேகம் கிளப்புறவங்க யாரு முனாஃபிக் என்று அல்லாஹ் பிரித்து விட்டான் அப்ப

ஹதீஸ்ல குழப்பம் பண்றது இது சாதாரணமான பிரச்சனை அல்ல இது எங்க போய் டேமேஜ் ஏற்படுத்துற பிரச்சனை ஈமானை போய் டேமேஜ் பண்ணி ஈமானுடைய அந்த ஸ்டேட்டஸை எடுத்துட்டு எதை கொண்டு வந்து அங்க வச்சிடும் நிஃபாக் நயவஞ்சகம் முனாஃபிக் என்கிற அந்த நிலையை கொண்டு வந்து வச்சுரும் அல்லாஹ் பாதுகாக்கணும்!

இந்த சுன்னத் என்று சொல்லும் பொழுது பித்அத் என்ற ஒரு வார்த்தையை சேர்த்து சேர்த்து பேசுறோம் பித்அ பித்அத் அந்த தாவைதான் நம்ம ஆவா வக்ஃப் செஞ்சு அல்லது தமிழ் வழக்கத்துல வரும்போது பித்அது சுன்னத்து அந்த மாதிரி சொல்றது உண்டு

بدع يبدع إبدع إبداع البدعة

அப்படின்னா என்னன்னா இதுக்கு முன்னாடி ஒன்றை செய்யாம புதுசா ஒன்னு செய்றதுக்கு பேரு பித்அத் என்பார்கள் அப்ப மார்க்கத்தில் பித்அத் என்றால் என்ன? மார்க்கத்தில் சொல்லப்படாமல் இருக்க கூடிய ஒரு செயலை மார்க்கத்தில் சொல்லப்படாமல் இருக்க கூடிய ஒரு செயலை மார்க்கத்தின் பெயரால் புதுமையாக செய்வது.

சரி எப்படி உதாரணமாக: இதுல வந்து பல வகை இருக்குது அதுல ஒன்னு நம்ம புரிஞ்சுக்கணும் சரியா இப்ப பாருங்க இந்த பித்அதை அறிஞர்கள் பல வகைகளாக நமக்கு வகைப்படுத்தி சொல்கிறார்கள் ஒன்று என்ன அப்படின்னு சொன்னா அறவே மார்க்கத்துல அப்படி ஒரு காரியமே அமலே இருக்காது அதை செய்யறது எப்படி உதாரணமாக நீங்கள் பார்த்திருப்பீங்க ஷபே பராத் என்று சொல்வார்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா!

ஷபே பராத் கேள்விப்பட்டு இருக்கீங்களா? இல்லையா? பள்ளிவாசலில பண்ணுவாங்க அதாவது ரொம்ப விசேஷமா பண்ணுவாங்க எப்படி ரமலானுடைய லைலத்துல் கதர் அதெல்லாம் மேல ஏன்னா அவங்க எப்படி கதை கட்டி வச்சிருக்காங்கன்னா ஒரு பள்ளிவாசலுக்கு போய் இருந்தேன் அந்த பள்ளிவாசல்ல போர்டுல எழுதி போட்டு இருக்காரு இமாம்.

என்ன தைரியம் பாருங்க மக்கள் கேட்க மாட்டாங்கன்னு இருந்தா எவ்வளவு பெரிய அத்துமீறல் அதுல போர்டுல எழுதி இருக்காரு ஒரு லைலத்துல் கத்ரு ஆயிரம் மாதங்களை விட சிறந்தது அது குர்ஆனில் இருக்கு ஒரு ஷபே பராத் ஆயிரம் லைலத்துல் கதரை விட சிறந்தது என்ன அயோக்கியத்தனம் சொல்லுங்க பாக்கலாம் கேட்டா ஏதாவது ஒரு புக்கு பேரை போட்டுட்டு இருக்கீங்க.

நீங்கபோய் தேடி பாருங்க ஆயிரம் மாதங்களை விட சிறந்த இரவை அல்லாஹுத்தஆலா குர்ஆன்ல சொல்லி இருக்கான் ஆயிரம் லைலத்துல் கதிரை விட சிறந்த இரவு ஷபே பராத்னா அது ஒரு குர்ஆன் ஆயத்திலையும் இல்ல ஷாஹிஹான ஹதீஸ்லயும் இல்லை.

ரசூல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் ஃபர்லு சொல்லிக் கொடுத்திருக்காங்க சுன்னத்து தொழ சொல்லிக் கொடுத்திருக்காங்க இல்லையா அது போக தஹஜத்து தொழுகை இருக்குது அப்புறம் லுஹா தொழுகை இருக்குது அப்புறம் ஒலூ உடைய காணிக்கை தொழுகை இருக்குது தகியத்துல் மஸ்ஜித் இருக்கு இப்படி எல்லாம் இருக்குதுல்ல இங்க பாருங்க சபே பராத்ல 100 ரக்காத் தொழுகணுமா அந்த நூறு ரக்காயத்துல ஒவ்வொரு ரக்காயத்திலும் சூரத்துல் இக்லாஸ் 10 தடவை ஓதி,

தொழுவனுமா இது போக அடுத்த தஸ்பீஹ் வெச்சிருப்பாங்க இப்போ காலத்துக்கு தகுந்த மாதிரி கொஞ்சம் கொஞ்சம் ஏதாச்சும் கொஞ்சம் லேசாகனும்ல நூறு ரக்காத் தொழுவறதா இருந்தா அப்ப என்ன செஞ்சாங்க அதை குறைச்சு குறைச்சுட்டு இப்ப தஸ்பீஹ் தொழுவேன்னு சொல்லி வச்சிருக்காங்க இப்ப அப்படி ஒரு இரவே முதல்ல இல்ல அப்ப அதுக்கு மேல எக்ஸ்ட்ரா அதுக்கு ஒரு பிட்டிங்,

அப்புறம் அடுத்த நாளு ஒரு நோன்பு அப்ப பித்அத் என்று சொல்லும் பொழுது அதனுடைய முதல் வகை என்ன முற்றிலும் மார்க்கத்தில் அறவே எதைப்பற்றி பிரஸ்தாபித்து சொல்லப்படவில்லையோ மார்க்கத்தில் முற்றிலும் எதைப்பற்றி பிரஸ்தாபித்து பிரஸ்தாபித்துனா என்ன ஸ்பெஷலா அதைப்பற்றி சொல்லப்படவில்லையோ அப்படி ஒரு செயலையோ ஒரு நாளையோ குறிப்பாக்கி ஒரு அமலை செய்வது,

இப்ப பாத்துக்கோங்க இன்னைக்கு முஸ்லிம் உலகத்துல இந்த சபே பராத்ங்கறது எப்படி என்று சொன்னால் அது வந்து அப்பேர்ப்பட்ட ஒரு புனிதம் இப்ப அத கூட ஒரு பெருநாளக்கி அதுக்கு ஒரு புது டிரஸ் எடுத்து பள்ளிவாசல்ல ஃபுல்லா விளக்கப் போட்டு அப்புறம் மூணு யாசீர் இதுல என்ன விசேஷம் தெரியுமா அதையும் நீங்க தெரிஞ்சுக்கணும் நல்லா கவனிச்சுக்கோங்க இதெல்லாம் உங்களுக்கு வந்து வாழ்க்கையில வந்து நீங்க ஹைலைட் பண்ணி புரிஞ்சுக்கறதுக்கு மிக முக்கியமானது.

அதாவது, சுன்னத்தை பின்பற்றக் கூடியவர்கள் அவங்க தான் தவ்ஹீத் வாதி ஒழுங்கான தவ்ஹீத்வாதின்னு சொல்லியிருக்கேன் இப்ப நீங்க சுன்னத் தொழுவுறீங்க இபாதத் பண்றீங்க எது செஞ்சாலும் சரி அல்லஹ்விடத்தில் துஆ கேட்போம் அல்லாஹ்வை தொழுவோம் நமக்கு சொர்க்கம் வேணும் சரியா! இல்லையா என்னங்க சொல்ல மாட்டேங்கிறீங்க நல்லா வீரமா சொல்லனும்ல அதுக்கு தான் அதான் நம்ம நோக்கம் இல்ல,

நாங்க செய்றது வந்து காசு பணத்துக்கு தான் பணக்காரன் ஆகுறதுக்கு தான் எங்களுக்கு பிரச்சினை வராமல் இருப்பதற்கு தான் அப்படின்னு உண்மையா தொழுகையாலி சொல்லுவானா சொல்லுங்க யாராவது உண்மையான தொழுகையாளி எனக்கு பிரச்சனை வரக்கூடாது அதுக்குதாங்க நான் தொழுகிறேன் எனக்கு வியாபாரத்தில் குழப்பம் வரக்கூடாது நஷ்டம் வரக்கூடாது அதுக்குத்தான் நான் தொழுகிறேன் என்று சொல்வானா நான் தொழுவுரது அல்லாஹ்விற்காக தொழுவுறாங்க,

நான் தொழுவது சொர்க்கத்திற்காக தொழுகிறேன் அல்லாஹ் எனக்கு பரக்கத்தை வாக்களித்து இருக்கிறான் இன்னைக்கும் தருவான் நாளைக்கும் தருவான் அப்படி தானே நம்ம நம்பிக்கை இங்கே பாருங்க எவன் எல்லாம் இந்த பித்அத் பண்றானோ தர்கா போறானோ இந்த பித்அத் ஆன செயலை செய்றாங்களோ அவங்களுக்கு நோக்கம் அல்லாஹுவை வணங்குகிறதோ சொர்க்கமோ எதுவுமே இருக்காது,

எப்படி இந்த சாமியார் கிட்ட போறவன் சிலுவை கிட்ட போறவன் அதாவது சிலைகள் கிட்ட போறவனுடைய நோக்கம் துன்யா மட்டுமே இருக்குமோ அதே போன்று ஷபே பராத்ல மூணு யாசின் ஓதுவாங்க அல்லாஹ் குர்ஆன்ல இதுக்கு என்ன சொல்லி இருக்கான் யாசின ஓது குர்ஆனை ஓது எதுக்கு ஓது சொர்க்கத்துக்காக வேண்டி ஓது இல்லையா எதுக்கு ஓது இதன் மூலமா நேர் வழிய தெரிந்து கொண்டு என்னை எப்படி பயப்படனும் என்னை எப்படி ஈமான் கொள்ளனும் புரியுதா?

இல்லையா குர்ஆனை எதுக்குங்க ஓதனும் அல்லாஹ்வை எப்படி ஈமான் கொள்ளனும்னு அல்லாஹ்வுடைய சக்தி எங்க சொல்லப்பட்டிருக்கிறது குர்ஆனில் சொல்லப்பட்டிருக்கிறது அல்லாஹ் தன்னை பற்றி எதுல சொல்றான் குர்ஆன்ல சொல்றான் அப்ப ஈமான் காக வேண்டி குர்ஆன் ஓதனும் அல்லாஹ் என்ன சட்டத்தை சொல்லி இருக்கிறான்,

இஸ்லாம் அதுக்காக வேண்டி குர்ஆன் ஓதனும் இதனுடைய நன்மையை அல்லாஹ்விடத்தில் சொர்க்கத்தில் எதிர்பார்க்கணும் இல்லையா மூன்று யாசின் ஓதுறாங்களா ஒரு யாசின் வாழ்க்கை நீடிக்கிறதுக்கா பாத்தீங்களா ஆயுள் நீடிக்கிறதுக்கு ஒரு ஆசை யகூதி மாதிரி யகூதிகளைப் பற்றி அல்லாஹ் என்ன சொல்கிறான்:

وَلَتَجِدَنَّهُمْ أَحْرَصَ النَّاسِ عَلَى حَيَاةٍ وَمِنَ الَّذِينَ أَشْرَكُوا يَوَدُّ أَحَدُهُمْ لَوْ يُعَمَّرُ أَلْفَ سَنَةٍ وَمَا هُوَ بِمُزَحْزِحِهِ مِنَ الْعَذَابِ أَنْ يُعَمَّرَ وَاللَّهُ بَصِيرٌ بِمَا يَعْمَلُونَ

இன்னும் (நபியே! பொதுவாக எல்லா) மக்களை விடவும் (குறிப்பாக) இணைவைப்பவர்களை விடவும் (உலக) வாழ்க்கையின் மீது பேராசைக்காரர்களாக அவர்களை (-யூதர்களை) நிச்சயமாக நீர் காண்பீர்! அவர்களில் ஒருவர், “அவர் ஆயிரம் ஆண்டு(கள்) உயிரோடு இருக்க வேண்டுமே?” என்று விரும்புவார். அவர் (நீண்ட காலம்) வயது நீட்டிக்கப்படுவது (அல்லாஹ்வின்) தண்டனையிலிருந்து அவரைத் தப்ப வைக்கக்கூடியதில்லை. அல்லாஹ், அவர்கள் செய்வதை உற்று நோக்குபவன் ஆவான். (அல்குர்ஆன் 2 : 96)

ஆயிரம் வருஷம் இந்த துனியாவுல வாழனும்னு ஆசைப்படுவான் இல்லையா ஒரு முஃமினு அல்லாஹ்விடத்தில் சீக்கிரமாக போயிடுவோம் என்று சொல்லி ஆசைப்பட்டு கிட்டே இருப்பான் அல்ஹம்துலில்லாஹ் போதும் வாழ்ந்தது.

